

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை, மொரிசியஸ் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் கைலேஷ் குமார் சிங் ஜகுத்பால் நேற்று முன்தினம் (23.08.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மருத்துவக் கட்டமைப்புகள், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் நிர்வாக இயக்குநர் எம்.அரவிந்த், மொரிசியஸ் குடியரசு நாட்டின் உயர் ஆணையர் (இந்தியா) தில்லம், தலைமை நிர்வாக அலுவலர் செவ்ருட்டுன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மு.தென்னவன் - கவிஞர் ஈரோடு இறைவன் - இரா.உமா, சீ.பாண்டிசக்தி பங்கேற்பு!

### சிவகங்கை மாவட்ட தி.மு.க இலக்கிய அணி சார்பில்

# மானாமதுரையில் கலைஞர் நூற்றாண்டு விழா, கருத்தரங்கம்: நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! கவிஞர் சிவமுத்து வளவன் அறிவிப்பு!

சிவகங்கை, ஆக. 25 - சிவகங்கை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ முத்து வளவன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி யின் சார்பில் கலைஞர் நூற் றாண்டு விழா கருத்தரங் கம் நலத்திட்ட உதவிகள் வழங்கல். கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழகச்செயலா ளர் கே.ஆர்.பெரியகருப் பன் தலைமையில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ முத்து வளவன் வரவேற்பு ரையில், மாவட்ட இலக் கிய அணி தலைவர் புலிக் குட்டி சீனிவாசன், மாவட்ட இலக்கிய அணி துணைத்தலைவர் ஆண் டனி சேவியர், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ச.சு ப்பி ரமணி, ம.ராதாகிருஷ்ணன், மு.சுப்பிரமணி, க.ராஜ பாண்டியன், அழகையா, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர்கள் மோக சுந்தரம், என்.எஸ்.மாணிக் கம், கே.ஆர்.அக்கினிராஜ், ஆர்.ரமேஷ், திருமலை மணி மாறன், சரவணன், அ.மகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறு கிறது.

முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புர வலர் மு.தென்னவன் கருத் தரங்க தொடக்கவுரையாற் றுகிறார்.

“மறக்க முடியுமா மறுக்க முடியுமா” என்ற தலைப் பில் கவிஞர் ஈரோடு இறை வன், சொல்லும் செயலும் என்ற தலைப்பில் மானாம துரை சட்டமன்ற உறுப்பி னர் ஆ.தமிழரசி ரவிக்கு மார், “மீட்சியும் புரட்சி யும்” என்ற தலைப்பில் திராவிட இயக்க தமிழர் பேரவை கொள்கை பரப்பு செயலாளர் இரா.உமா , “பேனாவும் செந்நாவும்” என்ற தலைப்பில் முனை வர் சி.பாண்டிசக்தி ஆகி யோர் கருத்தரங்க உரை யாற்றுகின்றனர்.

மாவட்ட அவைத்தலை வர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த. சேங்கைமாறன், ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம்.மணி முத்து, மாவட்டப் பொரு ளாளர் சுபதுரைராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.இராமையா, அ.முகமது, செ.முத்துதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பா.செந்தில் குமார், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் நகர் மன்ற தலைவர் மாரியப் பன் கென்னடி, கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி, மானாமதுரை நகர்கழக செயலாளர் க. பொன்னுசாமி, மேற்கு ஒன்றிய செயலாளர் அண் ணாதுரை, மானாமதுரை ஒன்றிய பெருந்தலைவர் கள் லதா அண்ணாதுரை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப மதியரசன், பொதுக்குழு உறுப்பினர் கள் கு.இராஜாங்கம், த.உத யகுமார், ஜெயமூர்த்தி, சிவகங்கை நகர்கழக செய லாளர் சி.எம்.துரை ஆனந்த், மானாமதுரை துணைப்பெருந்தலைவர் முத்துசாமி, காரைக்குடி நகர்மன்ற துணைத்தலை வர் குணசேகரன், மானாம துரை நகர்மன்ற துணைத்த லைவர் பாலசுந்தர், மாவட் டப் பிரதிநிதி காளியப்பன், மாவட்ட மாணவரணி கதிர் ராஜ்குமார், மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், ஒன்றிய கழ கச் செயலாளர் ஆர்.செல்வ ராஜ், கடம்பசாமி, வசந்தி சேங்கைமாறன், வே.தமிழ் மாறன், க.வெங்கட்மாறன் மற்றும் பலர் கலந்து கொள் கிறார்கள். கிழக்கு ஒன்றிய இலக்கிய அணி அமைப்பா ளர் வேல்முருகன், நன்றியு ரையாற்றுகிறார்.

இவ்வாறு அவர் அறிக் கையில் கூறியுள்ளார்.

## இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது வழக்குப்பதிவு!

நாகை, ஆக. 25 - கடந்த 21- 22 ஆம் தேதி களில் இலங்கை கடற் கொள்ளையர்கள் தாக்குத லால் காயமடைந்த ஆற்கா டுதுறை, வெள்ளபள்ளம் மீனவர்கள் 15 பேர் நாகை மற்றும் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இந்த தாக்குதல் தொடர்பாக வேதாரண் யம் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் 11 படகு மற்றும் அடையாளம் தெரி யாத 46 இலங்கை கடல் கொள்ளையர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசா ரணை செய்து வருகின்றனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** அண்ணே; குஜராத் மாநிலப் பல்க லைக் கழகம் ஒன்றில், “சனாதன இலக்கியம்” பாடத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளதாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம்; குஜராத் - வதோதராவில் உள்ள சாயாஜிராவ் பல்கலைக் கழகத்தில்தான் இப்படி பாடத்திட் டத்தை வடிவமைத்திருக்கிறார்கள்.**

**சாதிய ஏற்றத் தாழ்வுகளை நியாயப் படுத்தும் வைதீகத்தின் நோக்கங்கள், உபநிடதங்கள், வேதத்திற்குப் பிந்தைய ஆய்வு களின் அறிவுரைகள் - ஆகியவற்றை, ‘சனாதன இலக்கியம்’ என்ற தலைப்பில் கற்பிக்கப் போகிறார்களாம்.**

**சாயாஜிராவ் பல்கலைக் கழகத்தின் இந்தத் தொற்று, மற்ற பல்கலைக் கழகங்களுக்கும் பரவாது என்பதற்கு உத்தர வாதம் இல்லை.**

**எப்படியோ இந்தியத் திருநாட்டை, கற்காலத்திற்கு இழுத்துக்கொண்டு போகும் முனைப்பில் முழு மூச்சோடு இறங்கி இருக்கிறார்கள் !**

### இஸ்ரோ விஞ்ஞானிகளின் கடின உழைப்புக்குக் கிடைத்த அற்புத வெற்றி!

# இனி உலக நாடுகளில் இந்தியா விண்ணளாவிய புகழைப் பெறும்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 25 - இஸ்ரோ விஞ்ஞானிக ளின் கடின உழைப்புக்குக் கிடைத்த அற்புத வெற்றியெனவும், இனி உலக நாடுகளில் இந்தியா விண் ணளாவிய புகழைப் பெறும் என வும் ‘தினகரன்’ நாளேடு 24.8.2023 தேதியிட்ட இதழில் “வானளாவிய சாதனை” என்ற தலைப்பில் தலையங்கம் வெளி யிட்டுள்ளது.



தினகரன்
ஆகஸ்ட் 24, 2023 வியாழக்கிழமை
வானளாவிய சாதனை
நிலவின் தென் துருவத்தில் இதுவரை எந்த நாடும் விண்கலங்களை இறக்கியதில்லை. அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகளே நிலவின் தென்துருவப் பகுதிக்கு விண்கலங்களை அனுப்பி தோல்வியை தழுவியுள்ளன. அந்த வகையில் வல்லரசு நாடுகளுக்கு இந்தியா தனது வல்லமையை நிரூபித்து காட்டியுள்ளது. இந்த சாதனையை இந்தியாவுக்கு உரித்தாக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை இந்திய நாடே கொண்டாடி வருகிறது.
நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக சந்திரயான் - 3ஐ தரையிறக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகளை, உலக நாடுகள் அனைத்தும் வெகுவாக

அது வருமாறு:-

நிலவின் தென் துருவத்தில் இதுவரை எந்த நாடும் விண்க லங்களை இறக்கியதில்லை. அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள் ளிட்ட நாடுகளே நிலவின் தென் துருவப் பகுதிக்கு விண்கல ங்களை அனுப்பி தோல்வியை தழுவியுள்ளன. அந்த வகை யில் வல்லரசு நாடுகளுக்கு இந் தியா தனது வல்லமையை நிரூ பித்துக் காட்டியுள்ளது. இந்த சாதனையை இந்தியாவுக்கு உரித்தாக்கிய இஸ்ரோ விஞ்ஞா னிகளை இந்திய நாடே கொண் டாடி வருகிறது.

நிலவின் தென்துருவத்தில் வெற்றிகரமாக சந்திரயான் - 3ஐ தரையிறக்கிய இஸ்ரோ விஞ் ஞானிகளை, உலக நாடுகள் அனைத்தும் வெகுவாக பாராட்டி வருகின்றன.

கடந்த ஜூலை 14ம் தேதி நில வின் தென்துருவத்தை ஆராய்ச்சி செய்வதற்காக, இந் திய விண்வெளி ஆராய்ச்சி நிறு வனமான இஸ்ரோ, சந்திரயான் - 3 விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலமா னது புவி வட்டப்பாதையை வெற்றிகரமாக அடைந்தது. தொடர்ந்து சுற்றுவட்ட பாதை படிப்படியாக உயர்த்தப்பட்டு கடந்த ஆக. 5ம் தேதி நிலவின் சுற்றுவட்டப்பாதையை அடைந் தது.

பின்னர் சந்திரயான் - 3 விண்கலத்தின் பாதை குறைக் கப்பட்டு விக்ரம் லேண்டரை பிரிக்கும் பணிகள் கடந்த 17ம் தேதி மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து நிலவை சுற்றி வர வசதியாக விக்ரம் லேண்டரின் பாதை குறைக்கப்பட்டு நிலவின் அருகில் கொண்டு செல்லப்பட் டது. இதையடுத்து நிலவின் முதல் படத்தை விக்ரம் லேண் டர் இஸ்ரோவுக்கு அனுப்பி வைத்தது. இதனால் நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கப்படு மென்ற நம்பிக்கையில் இஸ்ரோ விஞ்ஞானிகள், இந்திய மக்கள் நம்பிக்கையோடு காத்திருந்த னர்.

நேற்று மாலை நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டரை தரையிறக்க இஸ்ரோ விஞ்ஞானிகள் ஆர்வ முடன் களமிறங்கினர். மாலை 5.44 மணிக்கு விக்ரம் லேண் டரை தரையிறக்குவதற்கான முயற்சியை தொடங்கினர். நேரம் நெருங்க, நெருங்க பதற் றம் அதிகரித்தது. விக்ரம் லேண் டரை தரையிறக்கும்போது, நில வின் ஈர்ப்புவிசை மிக முக்கிய பங்கு வகித்ததால், அதற்கு ஏற்ற வகையில், லேண்டரின் வேகத்தை கட்டுப்படுத்தும் பணி களில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டனர். மிகச்சரியாக தரை யிறங்க வேண்டுமே என விஞ் ஞானிகளோடு, இந்திய மக்க ளும் ஆர்வமுடனும், பதற் றத்துடனும் காத்திருந்தனர்.

மாலை 6.04 மணிக்கு விக் ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது. இதையடுத்து இஸ்ரோ விஞ்ஞானிகள் தங்க ளது மகிழ்ச்சியை கைத்தட்டி யும், ஆரவாரத்துடனும் உற்சாக மாக கொண்டாடினர். சர்வதேச அரங்கில் இந்தியாவின் பெரு மையை வானளாவிய அளவில் உயர்த்திய விஞ்ஞானிகளை, ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரத மர் மோடி, முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள், பொதுமக் கள் உட்பட பலரும் பாராட்டி வரு கின்றனர். உலக தலைவர்க ளும் இஸ்ரோவுக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித் துள்ளனர்.

தென் ஆப்பிரிக்காவில் இருந் தபடியே விக்ரம் லேண்டர் தரை யிறங்குவதை பார்வையிட்ட பிரதமர் மோடி, “இது வரலாற்று சிறப்புமிக்க தருணம். மிக பெரு மையாக இருக்கிறது. புதிய இந் தியாவின் விடியல் இது. இந்த தருணத்தை மறக்க முடியாது. இதற்கு முன் நடக்காதது. 140 கோடி இந்தியர்களின் துடிப்பால் இந்த அற்புத தருணம் உருவா கியுள்ளது என கூறியுள்ளார். ஏற் கனவே, சந்திரயான் 2 தோல்வி யடைந்ததால், இம்முறை இஸ்ரோ விஞ்ஞானிகள் முழு மூச்சோடு வெற்றிகரமாக நில வில் தரையிறக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அந்த கடின உழைப்புக்கு அற்புத வெற்றி கிடைத்திருக்கிறது. இனி உலக நாடுகளில் இந்தியா விண்ணளாவிய புகழை பெறும்.

இவ்வாறு அத்தலையங்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனிதா ஏற்பாட்டில்

# பூந்துறையில் மகளிர் அணி புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### டி.பி.எம்.மைதீன்கான் தலைமை! விஜிலா சத்யானந்த் முன்னிலை!

நெல்லை, ஆக. 25 - நெல்லை மத்திய மாவட்ட மகளிர் தொண் டரணி அமைப்பாளர் அனிதா ஏற்பாட்டில் நெல்லை சந்திப்பு சிந்து பூந் துறையில் மகளிர் அணி புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மாநில மக ளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யா னந்த் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.வி.சுரேஷ், கிரிஜா குமார், தலைமை செயற் குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் ராஜு, தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட முன்னாள் பொருளாளர் அருண்குமார், மாவட்ட முன்னாள் துணைச் செய லாளர் நவநீதன், மாவட்ட பிரதிநிதி இசக்கி பாண்டி யன், மாநகர துணை செய லாளர் அப்துல் கையூம், வட் டச் செயலாளர்கள் மேகை செல்வம், தென்கரை முத்து, பத்மராஜ், சிந்து முருகன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் ராஜகுமாரி, மாவட்ட தொண்டரணி அமைப்பா ளர் தொப்பி மைதீன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவி பத்மா, மகளிர் தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தேவிகா, விமலா, மாரி பிரியா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சத்தியவாணி முத்து, பவானி, ராஜகுமாரி, மகளிர் அணி துணை அமைப்பாளர் வள்ளியம் மாள், மாமன்ற உறுப்பினர் கள் கோகிலவாணி, ராஜகு மாரி, சகாய ஜூலியட் மேரி, வசந்தா, அமீர் பாத்து, மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் சாகிரா, மாநகர மகளிர் அணி துணை அமைப்பா ளர் ஹமிதா, மாநகர மக ளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மேரி, இலக் கிய அணி அமைப்பாளர் வின்சென்ட் வினோத், மாநகர மகளிர் அணி துணை அமைப்பாளர் பிந்து, சூப்பர் மணி, கீர்த்தி பொன்பாண்டி, சார்லி உட் பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்

## தமிழகம், புதுவையில் அடுத்த 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 25 - தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளின் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் முன் னதாக தெரிவித்து இருந்தது. இதனிடையே, சென்னையின் பல்வேறு பகுதி களில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பலத்த மழை பெய்தது.

இந்த நிலையில், தமிழகம், புதுவையில் அடுத்த 7 நாட்க ளுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தகவல் தெரிவித்துள்ளது. அத்து டன், விழுப்புரம், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்பிருப்ப தாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னையை பொறுத்த வரையில், வானம் மேகமூட்டத் துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அதிகபட்சமாக மேற்கு தாம்பரத்தில் 11.4 செ.மீ. மழையும், காட்டுக்குப்பம், உத் தண்டியில் தலா 10 செ.மீ. மழை யும் பதிவாகியுள்ளது. அத்துடன், திருவொற்றியூர், சோழிங்க நல்லூர், முகலிவாக்கம் ஆகிய பகுதிகளில் தலா 8 செ.மீ. மழை யும், கொரட்டூர், மணலி, கோடம் பாக்கத்தில் தலா 7 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.



சென்னை, கிண்டி வனத்துறை முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அலுவலக கூட்ட அரங்கில் 22.8.2023 அன்று நடைபெற்ற மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் தமிழக முதலமைச்சர் முகவரிக் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் உடனடி நடவடிக்கை மற்றும் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆய்வு மேற்கொண்டார். அக்கூட்டத்தில் முதன்மை வனப்பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) சுப்ரத் மஹாபத்ரா, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் / தலைமைச் செயல் அலுவலர் சுதாநாஷீ குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி, உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துரை. கலியமூர்த்தி
### ஆகஸ்ட் 25 (1989)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, பரங்கிப்பேட்டை, சிதம்பரம் பகுதிகளில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக மூன்று முறையும், சிதம்பரம் நகரச் செயலாளராக இரண்டு முறையும் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு, மொழிப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை மறியல் போன்ற போராட்டங்கள் மற்றும் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1977ல் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் – 1986ல் சிதம்பரம் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**